





48வது சென்னை புத்தகக் காட்சியில் திராவிட இயக்க

# ஆளுமை ஒருவருடன் தினந்தோறும் வாசகர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சி!

## வே.மதிமாறன் உடனான கலந்துரையாடலில் வாசகர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர்!






சென்னை, டிச. 30 -

சென்னையில் நடைபெறும் 48-வது புத்தகக் காட்சியில் திராவிட இயக்க ஆளுமை ஒருவருடன் தினந்தோறும் வாசகர்கள் பங்கேற்கும் கலந்துரையாடல் நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் திராவிட இயக்க எழுத்தாளர் வே.மதிமாறன் உடனான கலந்துரையாடலில், வாசகர்கள் பலரும் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

**துணை முதலமைச்சர்**

சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் 27.12.2024 அன்று 48-வது சென்னை புத்தகக் காட்சியைத் தொடங்கிவைத்த மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக இளைஞர் அணியின் சார்பில் அமைக்கப் பட்டுள்ள முத்தமிழறிஞர் பதிப்பக அரங்கைப் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து, வாசகர்களின் வாசிப்பு அனுபவத்தை ஊக்குவிக்கும் விதமாக, தினம் தோறும் திராவிட இயக்க எழுத்தாளுமையை அழைத்து வந்து, வாசகர்களின் கேள்விக்குப் பதில் அளிக்கும் நிகழ்ச்சிக்கு முத்தமிழறிஞர் பதிப்பகம் ஏற்பாடு செய்துள்ளது.

**இளம் பேச்சாளர்கள்**

அந்த வகையில், முதல் நாளாக நேற்று முன்தினம் (28.12.2024) திராவிட இயக்க எழுத்தாளர் வே.மதிமாறன் முத்தமிழறிஞர் பதிப்பக அரங்கிற்கு வருகை தந்தார். அதனையொட்டி, இளைஞர் அணியைச் சார்ந்தவர்களும், வாசகர்களும், தி.மு.கழக இளைஞர் அணியின் 'என் உயிரினும் மேலான' பேச்சுப்போட்டி மூலம், இளம் பேச்சாளர்களாக அறிமுகம் ஆகியிருக்கும் சிலரும் அரங்கிற்கு வருகை தந்திருந்தனர்.

அவர்களுடன் கலந்துரையாடிய வே.மதிமாறன், வாசிப்பு ஏன் அவசியம் என்பது குறித்தும் வாசிப்பின் ஊடாக, திராவிட இயக்க கருத்தியலை உள்வாங்குவது எப்படி என்பது குறித்தும் எடுத்துரைத்தார்.

**எதை வாசிக்க வேண்டும்?**

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது எழுத்துகளும், பேச்சுகளும் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கம், அதனால் ஏற்பட்ட விளைவுகள் குறித்தும் விளக்கியதுடன், எதை வாசிக்க வேண்டும்? எப்படி வாசிக்க வேண்டும், எதற்காக வாசிக்க வேண்டும் என்றும் அவர் ஆற்றிய சிறு உரை வாசகர்களை ஈர்த்தது.

**ஆரோக்கியமான உரையாடல்**

குறிப்பாக, கலைஞர் மீது கட்டமைக்கப்பட்ட அவதூறுகள் குறித்து, வாசகர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு, அவர் அளித்த பதில், கடந்த 50 ஆண்டுகால அரசியல் வரலாற்றையும், கலைஞரின் பங்களிப்பையும், தி.மு.க.-வின் கடந்தகால செயல்பாடுகளையும் திரும்பிப் பார்க்க வைக்கும் விதமாக இருந்தது. ஆரோக்கியமான உரையாடலாக இருந்தது என்ற மனநிறைவோடு வாசகர்கள் சென்றனர்.

வாசகர்களின் வாசிப்பு அனுபவத்தை ஊக்குவிக்கும் விதமாக, தினம்தோறும் திராவிட இயக்க எழுத்தாளுமையுடனான, கலந்துரையாடல் நிகழ்ச்சியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.30 மணிக்கு, திராவிட இயக்க ஆய்வாளர் தமிழ் காமராசன் பங்கேற்கிறார்.